முச்சந்தி முரளி



"அப்ப லஞ்சம் வஞ்சகம் இல்லாமல் எல்லா இடமும் தான் உலாவுது பாருங்கோ"


Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 327

வெள்ளிக்கிழமை
18 ஒக்ரோபர் 2024

ஐப்பசி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


# என்னுடன் பயணித்தோரை நாடாளுமன்று அனுப்புக!

## முன்னாள் ஜனாதிபதி ரணில் கோரிக்கை



**கொழும்பு, ஒக்ரோபர் 18**

**நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் முன்னோக்கிச் செல்வதற்கும், தன்னுடன் இணைந்து செயற்பட்ட அனுபவசாலிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் கோரிக்கை விடுத்துள்ளார்.**

11

## 5 மில்லியன் டொலரை லஞ்சம் தர முயன்றனர்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 18

நான் பிரதமராக இருந்தபோது எனக்கு 5 மில்லியன் அமெரிக்க டொலரை இலஞ்சமாக வழங்க முயற்சித்தனர். அதனை நான் மறுத்துவிட்டேன். இலஞ்சம் மற்றும் ஊழல் முழு நாட்டையும் அழிக்கும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

11

## அனுபவங்களில் இருந்து பாடம் கற்பது அவசியம்

### பாதுகாப்புச் செயலர் கருத்து



கொழும்பு, ஒக். 18

கடந்தகால அனுபவங்களிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ளவேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் எயார் வைஸ்மார்ஷல் துயகோந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தத்தின் விளைவுகளை நாங்கள் அனுபவித்துள்ளோம், அமைதியின் குணப்படுத்தும் சக்தியையும் அனுபவித்திருக்

11

## நிமோனியாவால் பெண் இறப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 18

நிமோனியாக் காய்ச்சல் காரணமாகப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். கோப்பாய் தெற்கு வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த காந்தீபன் சுதர்சினி (வயது - 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தேசியக் கல்லூரி விடுதி ஊழியரான அவர், காய்ச்சல் காரணமாக கடந்த 11 ஆம்

11

## அபிவிருத்தி, உரிமைகள் இரண்டும் இரு கண்களே

### யாழ். மாநகர முன்னாள் முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

கடந்த காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகச் செயற்பட்ட அனைவரையும் தமிழ் மக்கள் நிராகரிக்கவேண்டும் என யாழ். மாநகர முன்னாள் முதல்வரும் தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமான வி.மணிவண்ணன் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் மான் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் கூட்டணி வேட்பாளர்

11

## நாடாளுமன்றத் தேர்தல்: முறைப்பாடு 257!

கொழும்பு, ஒக். 18

நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக இதுவரை 257 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே இந்த முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், வன்முறைச் சம்பவங்கள் எவையும் பதிவாகவில்லை என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

## பெருந்தெருக்கள் அபிவிருத்தி; துரிதப்படுத்த அநுர உத்தரவு



கொழும்பு, ஒக். 18

பெருந்தெருக்கள் உள்ளிட்ட வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரிய திணைக்களங்களுக்கு உத்தரவிட்டுள்ளார். போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

11

## மனவழுத்த மருந்துக்கு தற்போது தட்டுப்பாடு!

கொழும்பு, ஒக்.18

அரச மருந்துக் களஞ்சியத்தில் தற்போது மன அழுத்தத்துக்குப் பாவிக்கும் மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக அரச மருந்து வழங்கல் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

11

## திருச்சி சிறப்பு முகாமில் ஈழத்தமிழர்கள் போராட்டம்

சென்னை, ஒக். 18

தமிழ்நாட்டின் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழர்கள் தங்களை விடுதலை செய்ய வலியுறுத்தி நேற்றையதினம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

திருச்சி சிறப்பு முகாமின் துணையாட்சியர் நசிமுல் நிஷா முகாமுக்குச் சென்றபோதே அவர்கள் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். வழக்குகளில் இருந்து விடுதலை செய்யப்பட்ட தங்களை, முகாமிலிருந்து விடுதலை செய்யுமாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

11

## தமிழர்களுடைய பிரச்சினைகளை ஏற்கிறதாம் ஜே.வி.பி. அரசாங்கம்

வவுனியா, ஒக். 18

ஓர் அரசியல் கட்சி என்ற ரீதியில், தமிழர்களின் பிரச்சினைகளை ஏற்றுக்கொள்கின்றோம் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் இந்தப் பகுதியில் எமக்கான ஆதரவாளர்கள் அதிகரித்துள்ளனர். வடக்கு - கிழக்குக்கு அதிகாரம் வழங்கப்படாது என ரில்வின் சில்வா தெரி

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்பள அதிகரிப்பு: ரணிலின் சூழ்ச்சி

*அமைச்சரவைப் பேச்சாளர் விளாசல்*

**கொழும்பு, ஒக். 18**
**அரச உத்தியோகத்தர்களின் சம்பள அதிகரிப்பு என்பது நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளை அபகரிப்பதற்காக ரணிலால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சூழ்ச்சி என அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சுடன் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாகவே அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிக்கும் தீர்மானத்தை எடுத்துள்ளார் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் அதிகரிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு தொடர்ந்து வழங்கப்படுமா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் இவ்வாறு பதிலளித்துள்ளார். (ஒ-6)

# நாடாளுமன்றுக்கு புதிய முகங்கள்

*மாவீரர், போராளிகள் குடும்பநல காப்பகம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஒக். 18
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பழைய அரசியல்வாதிகளை நிராகரித்து புதிய முகங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும் என மாவீரர் போராளிகள் குடும்பநலக் காப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தேர்தலில் பெயரளவுக்குப் புதிய முகங்கள் களமிறக்கப்பட்டுள்ளன. எனவே குறித்த சூழ்ச்சிகரமான நடவடிக்கையைக் கண்டறிந்து வாக்காளர் பெருமக்கள் சரியான முறையில் சிந்தித்து பழைய அரசியல்வாதிகளைத் தோற்கடிக்க வேண்டும். கடந்த 15 வருடங்களாகவும் அதற்கு முன்னரும் இந்த பழைய அரசியல்வாதிகள் தமிழ் மக்களை விற்றுப் பிழைத்தார்களே தவிர மக்களுக்கு எதுவும் செய்யவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் புதிய முகங்களை பொதுமக்கள் தெரிவு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். (ஒ-20)

## தே.ம.சக்தியின் பரப்புரை கட்டுநாயக்கவில் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.18
பொதுத்தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் முதலாவது பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒக்ரோபர் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கட்டுநாயக்க பகுதியில் மாலை 3 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்கவுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்படும் பிரதான தேர்தல் கூட்டங்களில் மாத்திரமே ஜனாதிபதி பங்கேற்பார் என்று கூறப்படுகின்றது. (ச-44)

## ஹிருணிகாவை சாந்தப்படுத்திய சஜித்



கொழும்பு , ஒக்.18
ஐக்கிய மக்கள் சக்தியுடன் முரண்பட்ட அந்தக் சட்சியின் மகளிர் அணியின் தேசிய அமைப்பாளரான ஹிருணிகா பிரேமச்சந்திரவை கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ சமரசப்படுத்தியுள்ளார் எனக் கட்சி வட்டாரம் தெரிவித்துள்ளது.

அதற்கமையவே ஹிருணிகாவின் பதவிவிலகல் கடிதத்தை கட்சி ஏற்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் மகளிர் அணியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து விலகுவதாக ஹிருணிகா பிரேமச்சந்திர அறிவித்திருந்தார். இது தொடர்பான பதவி விலகல் கடிதத்தை கட்சிச் செயலாளருக்கு அனுப்பி இருந்தார். இந்த நிலையிலேயே ஹிருணிகாவை நேரில் அழைத்துப்பேசி, அவரைக் கட்சித் தலைவர் சமரசப்படுத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் பிறகே ஹிருணிகா பிரேமச் சந்திரவும், கட்சிச் செயலாளரும் இணைந்து கூட்டாக ஊடக சந்திப்பை நடத்தியுள்ளனர் எனத் தெரிய வருகின்றது. (ச-44)


## தமிழ்த் தேசியத்துக்கு புத்துயிர் ஊட்டுவோம்

*தமிழ் இளையோர் கூட்டமைப்பு தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 18
சிதைவடைந்துள்ள தமிழ்த் தேசிய அரசியலுக்குப் புத்துயிர் ஊட்டி எமது உரிமைப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாகவே நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் இளையோர் கூட்டமைப்பாக சுயேச்சை குழு 13 இல் கரும்பலகை சின்னத்தில் போட்டியிடுகின்றோம் என அதன் வேட்பாளர் கி.கிருஸ்ணமீனன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிதைவடைந்துள்ள தமிழ்த் தேசிய அரசியலையும், அரசியலில் மக்களுடைய நம்பிக்கையீனத்தை போக்கியும், தமிழ்த் தேச அரசியலுக்குப் புத்துயிர் ஊட்டி, மீள எமது உரிமைப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கவே நாங்கள் இந்தத் தேர்தலில் இளையோரை ஒருங்கிணைத்துப் போட்டியிடுகிறோம் - என்றார். (ஒ-20)




## தேர்தல் கண்காணிப்பில் 6 சர்வதேச அமைப்புகள்

கொழும்பு, ஒக்.18
பொதுத்தேர்தலுக்கான பரப்புரைப் போர் ஆரம்பமாகியுள்ள நிலையில், தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்கென 6 சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் நாட்டுக்கு வரவுள்ளன.

சார்க், பொதுநலவாய, ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக்குழுக்களே நாட்டுக்கு வரவுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலின்போதும் இந்த அமைப்புகளின் பிரதிநிதிகள், இலங்கையில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இலங்கை வரலாற்றில் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்ற தேர்தலாகவும், தேர்தலுக்குப் பின்னர் வன்முறை எதுவும் பதிவாகாத தேர்தலாகவும் ஜனாதிபதித் தேர்தல் அமைந்தது என சர்வதேச கண்காணிப்பாளர்கள் பாராட்டியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-44)

## பொதுத்தேர்தலில்
# பழைய வாக்குறுதிகளுடன் தென்னிலங்கைக் கட்சிகள்

கொழும்பு, ஒக்.18
தென்னிலங்கையிலுள்ள பிரதான அரசியல் கட்சிகள் பொதுத் தேர்தலுக்கான விஞ்ஞாபனங்களை முன்வைக்காதென அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலின்போது முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனங்களை அடிப்படையாகக் கொண்டே பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அறியமுடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு பொதுத்தேர்தலின்போது மக்களின் ஆணையை ஜனாதிபதிஅநுரகுமாரதிஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கோரியுள்ளது.

தமக்கு நாடாளுமன்றத்தின் ஆட்சி கிடைக்கப்பெற்றால் ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

எனினும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாத வடக்கிலுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள், தேர்தல் விஞ்ஞாபனங்களை முன்வைக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-44)

## ஜோதிடர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு , ஒக்.18
எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு ஆதரவாக ஜோதிட கணிப்புகளை செய்வதைத் தவிர்க்குமாறு அனைத்து ஜோதிடர்களுக்கும் தேர்தல் ஆணையம் இது தொடர்பில் அறிவிப்பு விடுத்துள்ளது.

இதுபோன்ற கணிப்புகளை வெளியிடுவது தேர்தல் சட்டப்படி கடுமையான குற்றமாகும். இவ்வாறான கணிப்புகளை வெளியிடுவோருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் அறிக்கையை அரசு வெளியிட வேண்டும்

## எதிர்க்கட்சி கோரிக்கை

**கொழும்பு, ஒக். 18**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகளை அரசாங்கம் வெளியிடவேண்டும் என்று பிரதான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.**

மேற்படி சம்பவம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் இரு அறிக்கைகளை வெளியிடுவதற்கு ஒக்ரோபர் 20 ஆம் திகதி வரை அரசாங்கத்துக்கு உதய கம்மன்பில அவகாசம் வழங்கியுள்ளார். அக்காலப்பகுதிக்குள் அறிக்கைகளை வெளியிடாவிட்டால் இரு அறிக்கைகளையும் ஒக்ரோபர் 21 ஆம் திகதி தான் வெளியிடுவார் எனவும் கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நளின் பண்டார கூறியவை வருமாறு,

'உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை முழுமையாக மக்களுக்கு வெளிப்படுத்தப்படவேண்டும் என நாம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி இருந்தோம்.

எனவே, அறிக்கையை வெளியிடவேண்டியது தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஏதேனும் அறிக்கையை ஒளிக்க முற்பட்டால் எவரையேனும் பாதுகாக்க முற்படுகின்றார்கள் என்பதே அதன் அர்த்தமாகும்' - என்றார். (ஒ-44)

# துப்பாக்கிகளை ஒப்படைத்த முன்னாள் அரசியல்வாதிகள்

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், அமைச்சர்களின் பாதுகாப்புக்கென வழங்கப்பட்ட துப்பாக்கிகள் யாவும் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் நளின் ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரோ, அமைச்சரோ அவர்களது பதவிக்காலம் முடிந்ததும் பாதுகாப்புக்கென வழங்கப்பட்ட துப்பாக்கி களைத் திரும்ப ஒப்படைக்கவேண்டும். அவை அவர்களது சொந்தப்பணத்தில் கொள்வனவு செய்திருந்தாலும் ஒப்படைக்கப்படவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். (ஒ-6)




## மியான்மருக்கு தேயிலை

மியான்மரைப் பாதித்த யாகி சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் மற்றும் ஒற்றுமையை வெளிப்படுத்தும் நடவடிக்கையாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் 227 கிலோ எடையுள்ள இலங்கை தேயிலையை மியான்மர் தூதுவர் மாலா தான் ஹைக்கிடம் வழங்கினார். சவாலான நேரத்தில் தேயிலை நன்கொடையாக வழங்கிய இலங்கை அரசுக்கு மியான்மர் அரசாங்கம் மனதார பாராட்டுவதாக தூதுவர் [illegible] தெரிவித்தார். (ச-இ)




காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதை கேள்விப்பட்டிருப்பியள். ஆனால் இஞ்ச ஒரு அரசியல்வாதிக்கு பனம்பழத்துக்குப் பதிலா தலையில பாறாங்கல்லு விழுந்திருக்கு. ஏற்கனவே அந்த அரசியல்வாதி அவரின்ர அப்பாவின்ர பேரில பார் பெர்மிற் எடுத்தவர் எண்டு ஒரு கதை பரவி, பிறகு 'அப்பிடியெல்லாம் பார் பெர்மிற் புதிசா எடுக்கேலை. முதலே அப்பான்ர பேர்ல இருந்த பார் லைசென்ஸைத்தான் புதுப்பிச்சனாங்கள். அதைத்தான் இப்பிடி பார் லைசென்ஸ் எடுத்தம் எண்டு கதை கட்டிப் போட்டாங்கள்' எண்டு அந்த அரசியல்வாதி ,பேஸ்புக்கில ஆதாரங்களோட போட்டவர். அதுக்குப் பிறகு அந்த பார் பெர்மிற் கதை அடங்கிட்டுது. இப்ப உங்களுக்கு விளங்கியிருக்கும், அந்த அரசியல்வாதி ஆரெண்டு.

'பார் பெர்மிற்' கட்டுக்கதைக்கு ஒரு முடிவு கட்டிப்போட்டன் எண்டு அந்த அரசியல்வாதி, தன்ர பாட்டில எலக்சன் வேலையில இறங்க, அடுத்த இடியொண்டு அவரின்ர தலையில விழுந்திருக்கு. அந்த அரசியல்வாதி ஒரு அரசாங்க அதிகாரியோட போய் கதைச்சுக்கொண்டிருக்கிற மாதிரியும், கதை முத்திப் போக அரசியல்வாதி எழும்பி அதிகாரிக்கு செவிட்டைப் பொத்தி மின்னுற மாதிரியும் ஒரு வீடியோ பேஸ்புக்கில பரவத் தொடங்கிட்டுது. வெறும்வாயை மெண்டுகொண்டிருந்த சனத்துக்கு அவல் கிடைச்சமாதிரி இந்த வீடியோ கிடைக்க, எல்லாரும் அந்த அரசியல்வாதியை திட்டித் தீர்க்க வெளிக்கிட்டிட்டினம். எலக்சன் நேரத்தில இப்பிடி அதிகாரிக்கு அடிக்கிறமாதிரி வீடியோ வந்தால், என்ன பிரசாரம் செய்தாலும் வெல்ல ஏலாதே. 'நான் அவனில்லை' எண்டு அந்த அரசியல்வாதி சொன்னதை ஒருத்தரும் காதில விழுத்தேலை. ஏனெண்டால் அவர் அப்பிடிச் செய்யக்கூடிய ஆள் எண்டதுதான் சனத்தின்ர எண்ணம்.

ஆனால் என்ன பகிடியெண்டால், உண்மையில இந்த வீடியோவில இருக்கிறது இஞ்சத்தை எங்கட யாழ்ப்பாணத்து அரசியல்வாதியில்லை. அது இந்தியாவில இருக்கிற 'ஸ்வாபிமானி தேகாரி சங்கதனா' எண்ட சங்கிகள் சங்கத்தின்ர தலைவராம். அந்தாள் தான் ஒரு வங்கி அதிகாரியை இப்பிடி வெளுத்திருக்கிறார். ஆனால் அந்த சங்கியும், எங்கட அரசியல்வாதியும் உருவம், உடுப்பு, தாடி எண்டு எல்லாம் ஒரே அச்சில வார்த்தது மாதிரி இருந்ததால, யாழ்ப்பாணத்து அரசியல்வாதி தான் அதிகாரியை அறைஞ்சு போட்டார் எண்டு வீடியோ பரவிட்டுதாம். இப்ப அந்த உண்மையான வீடியோ எப்ப , எங்க எதில வந்தது எண்டெல்லாம் யாழ்ப்பாணத்து அரசியவாதி போட்டு 'அடிச்சது நானில்லை' எண்டு சத்தியம் செய்திருக்கிறார். அவர் சொல்றது உண்மைதான். ஆனால் உண்மைக்கும் பேஸ்புக்குக்கும் சம்பந்தமில்லையே. அவர் உண்மையை ஆதாரத்தோட போட்ட பிறகு அந்த வீடியோ பேஸ்புக்கில சுத்திக்கொண்டுதான் இருக்கு. செய்யாத பாவத்துக்கு பழி சுமக்கிற பலன் போல அந்த அரசியல்வாதிக்கு.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றாற்றலுள்ளோர் தின நிகழ்வு

கோப்பாய்ப் பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் மற்றும் மாற்றாற்றலுள்ளோர் தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் யாழ்.வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயப் பிரதான மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ராதிகா சன்சீவன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் பிரதம விருந்தினராகவும், யாழ்.வாதரவத்தை விக்னேஸ்வரா அதிபர் கணேசகுலசிங்கம் துஷ்யந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ச-66)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 . 02 . 1948



உதிர்வு 20 . 10 . 2021

### அமரர் திருமதி பத்திநாதன் சந்திராதேவி

**திதி : ஐப்பசி மாத அபரபக்க பிரதமை**

எமை பாசத்துடன் அரவணைத்து வழிகாட்டி
எம் வாழ்வினை வளமாக்கிய எம் அன்புத் தாயே
ஆண்டுகள் மூன்று ஆனாலும் நித்தமும் உங்களை நினைத்து
உங்கள் நிழல் தேடி அலைகின்றோம் - நாம்
நிலையில்லா இவ்வுலகைவிட்டு நீள்துயில் கொண்ட உங்கள் ஆத்மா
குருக்கட்டு அரசடியான் பாதமதில் சாந்தியடைய
விநாயகனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் நினைவுகளில் வாழும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"தணிகை"
அல்வாய் வடக்கு, அல்வாய்.

(CS/1632) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 11 . 1947



மறைவு 16 . 10 . 2024

### கிருஸ்ணசாமி வாசுதேவன்

**(ஓய்வு பெற்ற சுகாதாரத்துறை சார்ந்த ஒளிப்பட இயக்குநர், தற்போதைய ஸ்ரீவேங்கடேசவரதராஜப் பெருமாள் கோவில் கணக்காளர்)**

யாழ் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணசாமி வாசுதேவன் அவர்கள் நேற்றுமுன்தினம் (16.10.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி - நாகலெட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகையா - சேஷம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணி அவர்களின் அன்புக் கணவரும், தர்சினி, வாகீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாஸ்கர், ரெஜினா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுரேந்தர், ஜெயந்தர் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (20.10.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 935 0273**

61, கேணியடி ஒழுங்கை,
அரியாலை.

(CS/56472) J-1


## யாழ்ப்பாணத்தில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம் , ஒக்.18

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக 'விதையனைத்தும் விருட்சமே' குழுமம் மற்றும் குறிஞ்சி கிறியேஷன்ஸ் இணைந்து நடத்தும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவில் இடம்பெறவுள்ளது.

குருதிக்கொடை முகாம் நிகழ்வில் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 16.09.2024 திங்கட்கிழமை அன்று இறைவன் பாதம் சேர்ந்த எங்கள் அன்புத் தந்தை

### அமரர் பென்சமின் J.நவரத்தினம்

அவர்களின் 31ம் நாள் வீட்டுப் பிரார்த்தனைகள் நாளை (19.10.2024) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"நிலாமனை"
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

**பிள்ளைகள்**
**077 266 8636**

(CS/56433) J-1


### ஓவியக் கண்காட்சி!

யாழ். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஓவியக் கண்காட்சி அதிபர் இ.புஸ்பரட்ணம் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக் கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தி னராக தெல்லிப்பழை கோட்டக் கல்வி அலுவலர் வே.அரசகேசரி, சிறப்பு விருந்தி னராக வலிகாம வலய ஆசிரிய ஆலோசகர் மா.தேவகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம-22)


**UNIVERSITY OF VAVUNIYA, SRI LANKA**

**REGISTRATION OF SUPPLIERS & CONTRACTORS - 2025**

Applications are invited up to **31st November 2024** from reputed Suppliers / Manufacturers / Contractors who wish to register for supplies / services.

The details of supplies / services and the conditions and Application form related to the registration are available in the University website **http://www.vau.ac.lk**.

Registrar
University of Vavuniya


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்த மாற்றம் வருமா?

மெல்லமெல்ல நாடாளுமன்றத் தேர்தல் திருவிழா களைகட்டத் தொடங்கிவிட்டது. அதிலும் வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்கள் கிடைத்ததும் தான் தாமதம், வில்லில் இருந்து புறப்பட்ட அம்புகளாக அதிவேகமாக, வேட்பாளர்கள் தமது பரப்புரை வியூகத்தை மாற்றியமைத்து, களமாடத் தொடங்கிவிட்டனர். இதுவரை காலமும் பிறகட்சிகளையும், மாற்றுக்கட்சி வேட்பாளர்களையுமே வசைபாடிய அரசியல்வாதிகள், இப்போது விருப்பிலக்கம் கிடைத்ததும் தங்கள் சுயபுராணங்களை முன்னிறுத்துவதோடு, தம் கட்சி வேட்பாளர்களையே முதுகில் குத்தும் வேலைகளில் இறங்குவதுதான் ஆகப்பெரும் அபத்தம். இது வேட்பாளர்களின் தவறல்ல. ஒவ்வொரு மாவட்டங்களுக்குமான தேர்தல் ஆசனங்கள் இவ்வளவுதான் என்று வரையறை செய்துவிட்டு, அந்த எண்ணிக்கைக்கேற்ப விருப்பு வாக்குகளில் முன்னிலையில் நிற்பவர்களே வெல்லமுடியும் என்ற முறைமை உள்ள நாட்டில், ஒரு கூட்டுக்கிளிகளாக உலாவரவேண்டிய ஒரே கட்சிக்காரர்களே ஆளையாள் கழுத்தறுக்கும் காரியங்களில் இறங்கித் தானாக வேண்டும். தக்கன தானே பிழைக்கும்.

ஒருவரையொருவர் பிணந்தின்னிக்கழுகுகளாக, கூட இருந்தே சக வேட்பாளர்கள் குதறும் இத்தகைய தேர்தல் முறைமையை மாற்றவேண்டும் என்று பல தரப்புகள் கோரிக்கை விடுத்தும் இன்னும் அது செயலுருப்பெறவில்லை. முன்னர் இருந்ததைப் போல தொகுதிவாரியான பிரதிநிதித்துவமே பொருத்தமானது என்றும் சிபார்சுகள் முன்வைக்கப்பட்டே வருகின்றன. ஏனெனில் தொகுதிவாரியான பிரதிநிதித்துவத்தில் நிறைய அனுகூலங்கள் உண்டு. குறித்த தொகுதி மக்கள் தங்களுக்கு நல்லது செய்யக்கூடிய, கொள்கைப் பிடிப்புள்ள, துடிப்பான, அர்ப்பணிப்பான நபர்களை தங்கள் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யலாம். இதன் மூலம் அந்தத் தொகுதிக்கான சகல தேவைகளையும் குறித்த பிரதிநிதி மூலம் செய்துகொள்ளமுடியும். அவ்வாறு தொகுதியை முன்னேற்றுவதில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருந்துவிட்டு, 'அங்கே போய் முறையிடுங்கள், இந்தத் தொகுதிக்கு நான் பொறுப்பில்லை' என்ற கதையெல்லாம் விட்டு பிரதிநிதிகள் தப்பித்துக் கொள்ளமுடியாது. வேட்பாளர்களும் பரந்துபட்டதாக பரப்புரை செய்து பணத்தையும், நேரத்தையும் வீணாக்கவேண்டிய அவசியமேயில்லை. ஏற்கனவே வேட்பாளர்கள் தொகுதி மக்களுக்குப் பரிச்சயமானவர்களாக இருப்பதாலும், அவர்களின் சேவைகள் பற்றிய அறிமுகம் இருப்பதாலும், குறுகிய பரப்புக்குள்ளேயே பரப்புரை செய்ய வேண்டியிருப்பதாலும் இப்போதைய விகிதாசார தேர்தல் முறையில் செலவழிக்கும்பணத்தில்பலமடங்கை வேட்பாளர்கள் மீதப்படுத்த முடியும். இலங்கை போன்ற பொருளாதாரத்தில் நலிவுற்ற நாடொன்றில் தேர்தல் பரப்புரைக்காக வீணடிக்கப்படும் பணத்தின் பெரும் பகுதியை சேமிக்க முடிந்தால், அது மிகப்பெரிய துணையாக இருக்கும். இதைவிட, தொகுதிவாரியான பிரதிநிதித்துவத் தெரிவு இடம்பெற்றால், இம்முறை இடம்பெறுவதைப் போன்று 'றப்பர் ஸ்ராம்ப்' கட்சிகளும், சுயேச்சைகளும் கண்டபடி தேர்தலில் களமிறங்கும் சந்தர்ப்பங்களும் வெகுவாகக் குறையும்.

மாற்றம், மாற்றம் என்று நொடிக்கொரு தடவை முழங்கும் அநுர அரசாங்கம், நாட்டின் அரசமைப்பை மாற்றும் போது, இந்த வீணாய்ப்போன விகிதாசாரத் தேர்தல் முறைமைக்கும் முடிவுகட்டினால், உண்மையிலே அது நாட்டுக்கும், மக்களுக்கும், பயனுள்ள மாற்றமாக அமையும். அவ்வாறு நிகழ்ந்தாலேயே இலங்கையில் ஆரோக்கியமான அரசியல் கலாசாரத்தையும் கட்டியெழுப்பமுடியும்.




# 13 நாள்களில் அரசால் ரூ.4,19,000 மில்.கடன்

*தெளிவுபடுத்த வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு*

**கொழும்பு , ஒக்.18**

**அரசாங்கம் கடந்த ஒக்ரோபர் 2ஆம் திகதிமுதல் 15ஆம் திகதி வரையான 13 நாள்களுக்கு திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறிகளினூடாக, தலா 41,900 கோடி ரூபா என்ற அடிப்படையில் 4 லட்சத்து 19 ஆயிரம் மில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுக்கொண்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன தெரிவித்துள்ளார்.**

அரசாங்கம் தொடர்ச்சியாக வரம்பற்ற வகையில் கடன் பெற்றுக்கொண்டிருக்கிறது. கடந்த சிலநாட்களுக்குள் அரசாங்கம் ஒரு நாளைக்கு 3 ஆயிரத்து223 கோடி ரூபா என்ற அடிப்படையில், அதாவது ஒரு மணிநேரத்துக்கு 134.29 கோடி ரூபா என்ற அடிப்படையில் கடன் பெற்றுள்ளது. இவ்வளவு கடன்களைப் பெற்று என்னசெய்கிறார்கள்? இந்தக்கடன்களினால்என்ன முதலீடு செய்கிறார்கள்? அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மீள மதிப்பீடு

யாழ்ப்பாணம், ஒக்.18

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுக்கான அனைத்து நடவடிக்கைகளும் தயார்படுத்தப்பட்டுள்ளன என இலங்கைப் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

மதிப்பீட்டுப் பணிகளை மனித உரிமைகள் ஆணைக்குழு வழங்கும் பரிந்துரைகளின் பின்னர் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளின் சில கேள்விகள் கசிந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-66)

# அலோசியஸ் சிறைப்பணி

3.5 பில்லியன் ரூபா நிதி மோசடிக் குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அவரது நிறுவனத்தின்மற்றைய அதிகாரி வெலிக்கடை சிறைச்சாலையின் பணிப்பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும்சிறையிலுள்ள வேலைப் பிரிவில் பணிபுரிவார்கள் என்று சிறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

*கடந்த ஆண்டில்*

# 1,327 பேருக்கு எய்ட்ஸ்

கடந்த 2023ஆம் ஆண்டு மட்டுமே எயிட்ஸ் தொற்றால் சுமார் 1,327 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

2003 முதல், எச்.ஐ.வி. எய்ட்ஸ் பரவுவது படிப்படியாக அதிகரித்து வருகிறது. 15 வயது முதல் 29 வயது வரை உள்ள இளைஞர்கள் இந்த நோயால் பாதிக்கப்படுவது மிகவும் துரதிர்ஷ்டவசமானது என்றும் மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

# ஈ.பி.எப். பாதுகாப்பு நடவடிக்கை என்ன?

ஊழியர் சேமலாபநிதியைப் பாதுகாப்பது தொடர்பாக அநுர அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள செயற்பாடு என்ன? என தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கேள்வி எழுப்பியுள்ளது. தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், ஊழியர் சேமலாபநிதி செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடனும் பொறுப்புக்கூறலுடனும் இடம்பெறவேண்டும். ஊழியர் சேமலாபநிதி ஊழியர்களின் கடின உழைப்பின் சேமிப்பு. ஓய்வு காலத்தில் அதைத்தான் ஊழியர்கள் நம்பியிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

**நாளை**

**19.10.2024**

சனிக்கிழமை - ஐப்பசி - 02

சுபநேரம் : 03.02- 04.32

ராகுகாலம் : 09.02 - 10.32

**நாளொரு நல்வார்த்தை**

**ஒன்றுக்கும் பயனற்றவர் என்று தள்ளி விடும்படியாக எவரும் இல்லை. சமயம் வரும்போது வேறு ஏதாவது ஒரு வகையில் எவரும் பயன்படக்கூடும்.**

- ஹென்றி போர்ட்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புற்றுநோயிலிருந்து பாதுகாப்போம் விழிப்புணர்வு ஊர்வலம்

கிளிநொச்சி, ஒக்.18

'புற்றுநோயிலிருந்து பாதுகாப்போம்' எனும் தொனிப் பொருளில் புற்றுநோய் விழிப்புணர்வு நடை பேரணி கிளிநொச்சி பிராந்திய சுகாதாரசேவைகள் பணி மனையின் தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவின் ஏற் பாட்டில் பளைப்பகுதி பிரதேச செயலகத்தில் நடை பெற்றது. விழிப்புணர்வு நடை பேரணி பளைப் பிர தேச மருத்துவமனையிலிருந்து பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் வரை முன்னெடுக்கப்பட்டது.

விழிப்புணர்வுப் பேரணி நடை பயணத்தில் கிளி நொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் மகப் பேற்று மருத்துவ நிபுணர் மருத்துவர் ஆர்.சுதர்சன், தொற்றாநோய்கள் சம்பந்தமான மருத்துவர் எஸ். பேனாட்டோ,பளை பிரதேச பொறுப்பு மருத்துவ அதி காரி எம்.பிரதீபன் ,பளை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் எச்.அனுசா, மருத்துவர்கள் மற்றும் தாதி யர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் பிரதேச செய லக மற்றும் பிரதேசசபை உத்தியோகத்தர்கள், இரா ணுவத்தினர், பொலிஸார், பாடசாலை மாணவர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-113)


# மாணவர்கள் கௌரவிப்பு!

யாழ்ப்பாணம், ஒக்.18

விடியல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் வர்த்தகப் பிரிவில் 2023 ஆம் ஆண்டு க.பொ.த உயர் தர பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது மாணவர்கள் பதக்கங்கள் அணிவித்தும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கியும் கௌரவிக்கப் பட்டனர்.

நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவ பிரிவுக்கு பொறுப்பான பேரா சிரியர் றொபின்ஸன் மற்றும் விடியல் அமைப்பினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 27)





# இதய மீள் செயற்படுத்தல் விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.18

உலக இதய மீள் செயற்படுத்தல் தினத்தை முன்னிட்டு மல்லாவி மருத்துவமனையினரின் ஏற்பாட்டில் சி.பி. ஆர். விழிப்புணர்வு நிகழ்வு மல்லாவி மத்திய பேருந்து நிலையம் மற்றும் மல்லாவி மத்தியகல்லூ ரியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற் றது. இதன்போது மருத்துவமனைக்கு வருவதற்கு முன்பே ஏற்படும் இறப்புகளை 40 முதல் 50% வரை குறைக்கலாம் என்பது தொடர்பான விழிப்புணர்வு செயன்முறை விளக்கம் மருத்துவர்க ளால் வழங்கப்பட்டது.

நிகழ்வில் பிரதிப் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப் பாளர் மருத்துவர் ச.மதுரகன், மல்லாவி ஆதார மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் தேசாஞ் சலி, செயற்றிறன் ஆலோசகர் மருத்துவர் லங்கா ரத்னா, மருத்துவர்களான சஜீவன், ஜசித், கிரேசி ஹன், மருத்துவ உத்தியோகத்தர் பாவினி, தாதிய உத்தியோகத்தர்களான என்.அச்சுதன், சந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச-25, 35)

# அப்துல் கலாமின் பிறந்தநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.18

யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும், விஞ்ஞானியுமான மறைந்த ஏ.பி.ஜே.அப்துல் கலாமின் 93 ஆவது பிறந்தநாள் நிகழ்வு யாழ். பொதுநூலக இந்தியன் கோணர் பகு தியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்.இந்தி யத் துணைத் தூதுவர் சாய் முரளி, யாழ்.மாநகரசபையின் ஆணையா ளர் ந.கிருஷ்ணேந்திரன், யாழ்.பொது நூலகப் பிரதம நூலகர் மற்றும் இந் தியத் துணைத் தூதரக அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ச-25,66)





# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள் வழங்கிவைப்பு

புத்தளத்தில் பல்வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாண வர்களுக்குச் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் உதவி கள் நேற்று முன்தினம் புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. புத்தளம் இந்து மத்திய கல்லூரி, சென்.மேரீஸ் மகா வித்தியா லயம், சென். என்றூஸ் கல்லூரி, மணல்குண்டு வித்தியாலயம், செய்னப் முஸ்லிம் கல்லூரி, ஆனந்த மத்திய கல்லூரி, சாஹிரா தேசியப் பாடசாலை, தில்லையடி முஸ்லிம் மகா வித் தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் பொருளா தாரம் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த 63 மாணவர்களுக்கு 136ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங் கும் நிகழ்வு சமூகசேவையாளர் எஸ். மகேந்திரன் தலைமை யில் சேனைக் குடியிருப்பு பத்தினியம்மன் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. புத்தளம்சென். மேரிஸ்தமிழ்மகா வித்தியாலயத் தில் கல்வி கற்கும் தரம் - 1 தொடக்கம் தரம் -5 வரையான 175 மாணவர்களுக்கு 74,000 ரூபா பெறுமதியான உணவுப் பெட்டி மற்றும் பிஸ்கட் என்பன வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் அருட்சகோதரி எஸ்.ஜெனட் றொட்ரிகோ புள்ளே தலை மையில் இடம்பெற்றது. (ரி-66)




# நிதி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.18

யாழ். மாவட்ட செயலகத்தில் மூன்றாம் காலாண்டிற்கான நிதி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்டச் செயலர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை பி. ப.2.30 மணிக்கு நடைபெற்றது. இதன்போது நிதி முகாமைத்துவம், கட்டுப்பாடுகள் மற்றும் நிதி முன்னேற்றங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. கலந்துரையாடலில் மேலதிக மாவட்டச் செயலர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர், கணக்காளர் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாகபூஷணி திருமண சேவை**

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

**077 138 7596, 071 999 9306**

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஒக்.18

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 13ஆவது ஆண்டு நிறைவும், சிறப்பு நிகழ்வுக ளும் முதியோர் சங்கத்தின் மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-45)

**வேலைவாய்ப்பு**

யாழ். நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hardware) நிறுவனங்களுக்கான வேலை வாய்ப்பு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:-

(CS/1643) J-1

**077 077 6469, 077 494 9683**

**காணிகள் விற்பனைக்கு**

யாழ். பிறவுண் வீதியில் 2 பரப்புக் காணியும், யாழ் பலாலி வீதியில் 5 பரப்புக் காணியும், யாழ் நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

(CS/1641) J-1

**077 723 2535**

**கடை வாடகைக்கு**

சாவகச்சேரி கச்சாய் வீதியில் 16"X26" அடி நீள அகலம் கொண்ட வியாபார நிலையம் வாடகைக்கு விடப்படும். நிறுவனங்கள், கொம்பனிகள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-

(CS/1642) J-1

**077 642 5049**

# கேள்வி அறிவித்தல்
# சபை நிதி - கட்டம் - IV
# வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை
# (கொல்லன்கலட்டி)

1. தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக் கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை செயலாளர், வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை - கொல்லன்கலட்டி, (தொலைபேசி இல: 021-2241130, தொலை நகல் 021-2243688) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.10.18 – 2024.11.01 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையில் சமர்ப்பித்து ரூ.3000.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 2024.11.04ம் திகதி மு.ப 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி) எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக் கேள்விகள், அவை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக் கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் பி.ப 2.30 மணிக்கு 2024.10.25 அன்று நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் | திகதி | தொகை (ரு) | தேவைப்படும் காலம் |
| 01 | NP/14/41(14)/05/02/ 371/CF-36/2024 | வீதி புனரமைத்தல் பலாலி கிழக்கு பத்திரகாளி கோவில் வீதி | 4.32 | 45 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 05.01.2025 | 44,000.00 | Till 02.02.2025 |
| 02 | NP/14/41(14)/05/02/ 372/CF-37/2024 | வீதி புனரமைத்தல் குழந்தையேசு சனசமூகநிலைய பின் வீதி – (கட்டம் - II) -இளவாலை வட மேற்கு | 2.87 | 45 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 05.01.2025 | 29,000.00 | Till 02.02.2025 |
| 03 | NP/14/41(14)/05/02/ 373/CF-38/2024 | வீதி புனரமைத்தல் சாயுடைவீதி - மாவிட்டபுரம் | 2.61 | 45 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 05.01.2025 | 27,000.00 | Till 02.02.2025 |
| 04 | NP/14/41(14)/05/02/ 374/CF-39/2024 | வீதி புனரமைத்தல் - மாரிவீதி – வசாவிளான் கிழக்கு | 2.27 | 45 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 05.01.2025 | 23,000.00 | Till 02.02.2025 |
| 05 | NP/14/41(14)/05/02/ 375/CF-40/2024 | வீதி புனரமைத்தல் சென்ஜேம்ஸ் வீதி முதலாவது இடதுபக்க வீதி - இளவாலை வடமேற்கு | 1.20 | 45 நாட்கள் | C9 & C8 வீதி நிர்மாணம் | 49 நாட்கள் | 22.12.2024 | 13,000.00 | Till 19.01.2025 |
| 06 | NP/14/41(14)/05/02/ 376/CF-41/2024 | சிறுவர் பூங்கா மேம்படுத்தல் - காங்கேசன்துறை | 7.76 | 45 நாட்கள் | C7 & C6 கட்டட நிர்மாணம் | 77 நாட்கள் | 19.01.2025 | 78,000.00 | Till 16.02.2025 |
| 07 | NP/14/41(14)/05/02/ 377/CF-42/2024 | பஸ்நிலையம் புனரமைத்தல் - தெல்லிப்பளை | 5.07 | 45 நாட்கள் | C7 & C6 கட்டட நிர்மாணம் | 77 நாட்கள் | 19.01.2025 | 51,000.00 | Till 16.02.2025 |

"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் வேறுவரிகள் நீங்கலாக) 50மில்லியனினுள் இருப்பதால், பிராந்திய முன்னுரிமைமற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) இல் குறிப்பிடப்பட்டவாறு பின் பற்றப்படும்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு**
**வலி வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை(கொல்லன்கலட்டி).**
**18.10.2024.**

(CR/43421) J-1

*ரூ. 35 மில்லியனில்*

## இரணைமடுக்குளத்தின் வாய்க்கால் சீரமைப்பு!

கிளிநொச்சி , ஒக்.18

வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக் களத்தின் 35 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சி இரணை மடுக்குளத்தின் இடதுகரை நீர் விநியோக வாய்க்கால் சீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக் குளத்தின் இட துகரை நீர் விநியோக வாய்க்காலின் நீர் திறந்து விடப்படும் துலுசுப் பகுதியில் ஏற்பட்டிருந்த நீர்க்கசிவைத் தடுக்கும் வகையிலான சீரமைப்புப் பணிகளே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த சிறு போகச்செய்கை அறுவடையின் பின்னர் குளத்தினுடைய குறித்த புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி திருவையாறு ஏற்று நீர்ப்பா சனத் திட்டத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் ஏனைய நீர்விநியோக நட வடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் குறித்த புனரமைப்புப் பணி கள் இடம்பெற்று வருகின்றன. புனர மைப்புப் பணிகள் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் நிறைவுறுத்தப்படும் என்று நீர்பாசனத்திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-113)

## மதுபானசாலை விவகாரம் ஆதாரமற்ற பழிபூசல்

*சீறுகிறார் அங்கஜன்*

கொழும்பு , ஒக்.18

கடந்த ஆட்சிக் காலத்தில் நாம் புதிய மது பான சாலைக்கான அனுமதியை அரசி டமிருந்து பெற்றுக் கொண்டதாக பல் வேறு தரப்புகளாலும் முன்வைக்கப்ப டுகிற ஆதாரபூர்வமற்ற தகவல்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராகி வரு கிறோம் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

தற்போது நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டு அதன் அடுத்த படியாக நாடாளு மன்றத் தேர்தலை நோக்கி நாடு நகர்ந்து செல்கிறது. இந்த நிலையில் என் மீதும் எனது தந்தையார் மீதும் பழி சுமத்தும் நோக்கில் சிலர் எந்த விதமான ஆதார மும் அற்ற வீண் குற்றச்சாட்டுகளை தமது சுயலாப அரசியல் தேவைகளுக் காக முன் வைத்து வருகின்றனர்.

எமது சமூக சேவைக்கு ஈடுகொடுக்க முடி யாதவர்களே இவ்வாறு பொய்யாக வாய்க்கு வந்தபடி பேசி வருகின்றனர். இவ்வாறானவர்களின் அர்த்தமற்ற பேச் சுகளுக்குப் பதில் கூறவேண்டிய தேவை எமக்கில்லை. ஆனாலும் மக்களைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை எமக்கு உண்டு. சுயலாப அரசியல் நோக்கத்திற் கான இத்தகைய பொய்க் குற்றச்சாட் டுகள் எதிர்காலத்திலும் திட்டமிட்டு பரப்பப் படுமானால், பரப்பும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு சிலர் தாங்கள் வாய் வீரர்கள் என்பதனைத் தொடர்ந்து நிரூபித்து வருகின்றனர். அவர்களால் ஒருபோதும் செயல் வீரர் களை வீழ்த்த முடியாது - என்றுள்ளது. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



LOLC ஃபினான்ஸ் பிஎல்சி உங்களின் நிலையான வைப்புக்கு உயர் பிரதிபலன்களுடன், உச்ச பாதுகாப்பையும் வழங்குகிறது. LOLC ஃபினான்ஸ் பிஎல்சியுடன் நீங்களும் இன்றே முதலீடு செய்து பெருமளவு பலன்களை அனுபவியுங்கள்.

| காலம் | மாதாந்த | | வருடாந்தம் | | முதிர்வு | |
|---|---|---|---|---|---|---|
| மாதங்கள் | சாதாரணம் | வருடாந்த சதவீதம் | சாதாரணம் | வருடாந்த சதவீதம் | சாதாரணம் | வருடாந்த சதவீதம் |
| 1 | 9.00% | 9.38% | | | 9.00% | 9.38% |
| 3 | 8.75% | 9.11% | | | 9.25% | 9.58% |
| 6 | 8.75% | 9.11% | | | 9.25% | 9.46% |
| 12 | 9.25% | 9.65% | 9.75% | 9.75% | 9.75% | 9.75% |
| 13 | 9.25% | 9.65% | | | 9.75% | 9.71% |
| 18 | 9.25% | 9.65% | | | 9.75% | 9.53% |
| 24 | 9.25% | 9.65% | 10.00% | 10.00% | 10.00% | 9.54% |
| 36 | 9.25% | 9.65% | 10.50% | 10.50% | 10.50% | 9.56% |
| 48 | 9.25% | 9.65% | 11.00% | 11.00% | 11.00% | 9.54% |
| 60 | 9.25% | 9.65% | 11.50% | 11.50% | 11.50% | 9.51% |

இந்த வட்டி வீதம் 2024/10/18 திகதிக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

*நிபந்தனை பொருந்தும்

இலங்கையின் மாபெரும் நிதி நிறுவனத்திடமிருந்து உங்கள் நிலையான வைப்புக்களுக்கு மிக அதிகமான அனுகூலங்கள்

0117 574 610

தொடர்புகளுக்கு: 0115 715 555 www.lolcfinance.com

LOLC பினான்ஸ்

# மக்களின் ஆணையை மீறிய அரசியல்வாதிகள்

## *ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பினர் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஒக். 18

2009இல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் ஓர் அரசியல் தீர்வை நோக்கியதான நகர்வுக்காக மக்கள் தமது ஆணையை வழங்கி வந்துள்ளார்கள். ஆனால் ஆணையைப் பெற்ற அரசியல்வாதிகள் அதனைச் சரியாகப் பயன்படுத்தவில்லை. மக்களின் விருப்பங்கள் நிறைவேற்றப்படவில்லை. அதனால்தான் தமிழ்த் தேசியப் பேரவை மற்றும் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் கொள்கைகளின் வழி நாம் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

-இவ்வாறு யாழ். மாவட்டத்தில் பசுச் சின்னத்தில் போட்டியிடும் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் சுயேச்சைக் குழு தலைமை வேட்பாளர் கலாநிதி தேவானந்த் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய அரசியல் சூழலில் தமிழ் மக்கள் மத்தியில் பரந்த எதிர்ப்புணர்வு இருப்பதைப் பார்க்க முடிகின்றது. போர் முடிந்த பின்னர் தமிழ் மக்கள் தமது வாழ்க்கை மேம்பாடு, அரசியல் இருப்பு, சுயநிர்ணயம் என்பவை சார்ந்து ஒரு தீர்வு நோக்கிச் செல்லும் என்று பேரவாவோடு இருந்தார்கள். ஆனால் அவர்களின் பேரவா நிறைவேறும் திசையை நோக்கி எமது அரசியல் செல்லவில்லை. எனவேதான் ஒரு மாற்றம் தேவை என்று இன்று எண்ணுகின்றார்கள்.

எமது இயக்கம் தேர்தலுக்காக முளைத்த ஒரு கட்சி அல்ல. நீண்ட பயணத்தைக் கொண்ட இயக்கம். இப்போது தேர்தல் களத்தில் அது தன்னை முன்னிலைப்படுத்தியிருக்கின்றது. தமிழ்த் தேசிய சக்தி என்கிற பின்புலத்தில் இருந்துதான் இந்த இயக்கம் இயங்குகின்றது.

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இனியும் நலிந்து கிடக்காமல் பொருளாதாரத்தில் மேம்படவேண்டும். ஏனென்றால் எப்போதுமே ஓர் அடிப்படையான தேவை பூர்த்தி செய்யப்படும்போதுதான் அந்த மக்கள் அல்லது இனம் தமது விடுதலையைப் பற்றி முழுமையாகச் சிந்திக்க முடியும் - என்றார். (ஒ-20)



யாழ். வணிகர் கழகத்துக்கும் சனநாயக தமிழரசுக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு யாழ். வணிகர் கழக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் மற்றும் சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா, வடமாகாண விவசாயத்துறை முன்னாள் அமைச்சர் பொ. ஐங்கரநேசன், விமேலேஸ்வரி, குணாளன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-125)

# வீட்டுடன் பயணிப்போம்

## *வேட்பாளர் டினேசன் கோரிக்கை*

வவுனியா, ஒக். 18

தமிழர்களின் அடையாளச் சின்னமான வீட்டுடன் அனைவரும் பயணிப்பீர்கள் என நம்புவதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தென்பகுதி மக்கள் ஒரு மாற்றத்தை விரும்பிய பின்னர் எமது பிரதேச மக்களும் மாற்றம் ஒன்று வேண்டும். இளைஞர்கள் அரசியலில் குதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளனர்.

எமது கட்சியில் சில தன்னிச்சையான நடவடிக்கைகள் காரணமாக கட்சியில் திருப்தியின்மை காணப்படுகின்றது. தமிழரசுக் கட்சியானது எமது பாரம்பரிய கட்சி.

தமிழர்களின் அடையாளம் வீட்டுச் சின்னம். எமது தேசியத் தலைவர் மேதகு பிரபாகரனால் அடையாளம் காட்டப்பட்ட சின்னம் வீட்டுச் சின்னம். எனவே நீங்கள் அனைவரும் வீட்டுடன் பயணிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்.

என்னில் நம்பிக்கை வைத்து என்னுடன் பயணியுங்கள். முன்னைய அரசியல் பிரதிநிதிகளை விட இனி வரப்போகின்ற புதிய அரசியல் பிரதிநிதிகள் எதனைச் செய்யவேண்டும் என்பது குறித்து சிந்தியுங்கள் - என்றார். (ஒ-56)





சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின விழிப்புணர்வு நடைபவனி நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-9)

# அரிசிக்கு தட்டுப்பாடு

கொழும்பு, ஒக்.18

நாடு முழுவதிலும் அரிசி வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியின் விலையை உயர்த்தியதைத் தொடர்ந்து நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களும் விலைகளை உயர்த்தியுள்ளனர். மேலும், நாட்டில் கீரிச் சம்பா தவிர்ந்த ஏனைய அரிசி வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. சந்தையில் ஒரு கிலோகிராம் அரிசியின் விலை 210 ரூபா முதல் 230 ரூபா வரையிலும் கீரிச் சம்பா 250 முதல் 270 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முத்திரைக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.18
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டுச் சுன்னாகம் பொது நூலகத்தினின் ஏற்பாட்டில் முத்திரைக் கண்காட்சியும் விற்பனையும் சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் மு.ப. 10 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது. (ச-25,66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காகச் செலவு செய்ய நேரும். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. நரசிம்மரை வழிபட நலன்கள் அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். செலவுகளால் கடன் வாங்க நேரிடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** முயற்சிகள் வெற்றியாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். காரியம் அனுகூலமாக முடியும். பண உதவி கிடைக்கும். வீண் செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். இலாபம் கிடைக்கும். மகாவிஷ்ணுவை வழிபட நல்லதொரு திருப்பம் ஏற்படும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். பணம் இன்று கிடைக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படலாம். வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம். முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்படும். காரியம் அனுகூலமாக முடியும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும். பாதிப்பு எதுவும் இருக்காது. செலவு செய்ய வேண்டி வரும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். பழைய கடன்களைத் தந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பொறுமை அவசியம். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும். இடையூறுகளைத் தவிர்த்துவிடலாம். ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கும்.

**கும்பம்:** கருத்துவேறுபாடுகள் நீங்கும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் செலவுகளும் ஏற்படக்கூடும்.



# கைப்பந்தாட்டப் போட்டி தேசியத்தில் 2 ஆம் இடம்

கிளிநொச்சி, ஒக்.18
கிளிநொச்சி, அக்கராயன் மகா வித்தியாலய 17 வயது அணி கைப்பந்தாட்டப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது. (ரி-13)

# குடிசன மதிப்பீடு யாழில் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஒக்.18
இலங்கையின் 15 ஆவது குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பின் இறுதிப் பகுதியான கணக்கெடுக்கும் கட்டத்தின் ஓர் அங்கமாக யாழ். மாவட்டத்துக்கான கணக்கெடுக்கும் பணி நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கோப்பாய் வடக்கு கிராமத்தில் யாழ். மாவட்டப் பதில் செயலரும், தொகை மதிப்பு ஆணையாளருமான மருதலிங்கம் பிரதீபன் இதனை ஆரம்பித்து வைத்தார்.
நிகழ்வில் கோப்பாய்ப் பிரதேச செயலாளர் எஸ். சிவசிறி, மாவட்டப் புள்ளிவிவரப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ம. வித்தியானந்தநேசன், கோப்பாய்ப் பிரதேச செயலகப் புள்ளிவிவர உத்தியோகத்தர் மற்றும் கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-66)

# பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஒக்.18
ஆங்கிலத்தில் கடிதம் வரைதல் தொடர்பான பயிற்சிநெறி உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.
யாழ். பல்கலைக்கழக ஆங்கில போதனாசிரியர் திருமதி இரகுராம் வளவாளராகப் பங்குபற்றி, பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தார். (ச-25, 9)



# கசிப்புடன் ஒருவர் அராலியில் கைது

யாழ்ப்பாணம், ஒக்.18
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி பகுதியில் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று வியாழக் கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் கீழ் இயங்கும், யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். இவர் அராலிப் பகுதியில் நீண்ட நாள்களாக கசிப்பை விற்பனை செய்து வந்தமை கண்டறியப்பட்டுள்ளதுடன் அவரின் வீட்டிலிருந்து ஏழு லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட கசிப்புடன் சந்தேகநபர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-27)

# மலேசியாவில் மனிதக்கடத்தல்

மலேசியாவில் முன்னெப்போதும் இல்லாத வகையில், மனிதக் கடத்தல்களும் பாலியல் வன்செயல்களும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 01.12.1979 மறைவு 17.10.2024

எமது கல்லூரியின் எம் சக உத்தியோகத்தர்

**அமிர்தலிங்கம் சுதர்சினி**

(சமையளாளர் யா.தே.க.கல்லூரி)

மனித வாழ்வில் மரணம் இயற்கைதான்!
இயற்கையில் வந்தால் ஏற்கலாம்
நீங்கள் வாழ வேண்டிய வயதில்
வாடிய மலராகி உதிர்ந்து போனதேனோ?

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆழா துயரில்
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கல்விசாரா ஊழியர் நலன்புரிச்சங்கம்**

(CS 1458) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்றும் தொடர்ந்தது போர்!

யாழ்ப்பாணம், ஒக். 18
தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்றக்கோரியும், அதனைச் சுற்றியுள்ள தமிழ்மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளை மீளவும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வலியுறுத்தியும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் குறித்த விகாரைக்கு அருகில் மீண்டும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பமான நிலையில் பௌர்ணமி நாளான நேற்று வியாழக்கிழமை இரண்டாவது நாளாகவும் கறுப்புக் கொடிகளுடன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ-ம-66)

## அபிவிருத்தி...

களின் ஊடக சந்திப்பு யாழ். ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த போதே வி. மணிவண்ணன் இதனைத் தெரிவித்தார்.
மேலும் தெரிவிக்கையில்,
எதிர்வரும் தேர்தலானது நாடு முழுவதும் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற கருத்தியல் காணப்படும் நேரத்தில் வரும் தேர்தலாகக் காணப்படுகிறது. இதுவரை காலமும் மக்களால் கருத்தில் எடுக்கப்படாத தேசிய மக்கள் சக்தி என அழைக்கப்படும் ஜே.வி.பி. தென்னிலங்கையில் தனது ஆதரவைப் பெருக்கி ஆட்சியமைத்திருக்கிறார்கள். அதன் ஊடாக தென்னிலங்கை மக்கள் ஒரு செய்தியை சொல்லியிருக்கிறார்கள். நாட்டை பழுதாக்கிய பழைய ஆட்சியாளர்களை துடைத்தெறிந்து புதிய நேர்மையான ஆட்சியாளர்களையும் ஊழலற்ற அரசியல் கலாசாரத்தையும் உருவாக்கவேண்டும்என்ற செய்தியை நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதி தேர்தலில் தென்னிலங்கை மக்கள் சொல்லியிருக்கிறார்கள். தெற்கில் பல மூத்த அரசியல் தலைவர்கள் போட்டியிடுவதில் இருந்து விலகியிருக்கிறார்கள். ஆனால் வடக்கு - கிழக்கில் இன்னமும் அரசியல் தலைவர்கள் தென்னிலங்கையில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளாதவர்களாக இருக்கின்றார்கள்.
தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்கினேஸ்வரன் இளைஞர்களுக்கு வழிவிடும் வகையில் யாழ். மாவட்டத்தில் இம்முறை போட்டியிடவில்லை. விக்கினேஸ்வரனைத் தவிர ஏனைய நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களும் மீண்டும் போட்டியிடவேண்டும் என்கிற பேரவாவில் இருக்கின்றனர். ஏனைய கட்சிகளின் வேட்பாளர்களை பார்த்தால் கடந்த 15 வருடங்களாக நாடாளுமன்றத்தில் இருந்து தமிழ் மக்களுக்கு எதையுமே சாதித்திராத நபர்களைக் கொண்ட அணிகளாகக் காணப்படுகின்றன. தென்னிலங்கையில் மக்கள் வெளிப்படுத்திய பிரதிபலிப்பை மீண்டும் உணராதவர்களாக உள்ளனர்.
என்னைப் பொறுத்தவரை தமிழ் அரசியலிலும் இந்தப் பண்பியல்பு மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும். கடந்த காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களை தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக நிராகரித்து அவர்களுக்கு ஓய்வை வழங்கவேண்டும். புதிய இளைய ஆளுமைகளை தமிழ் மக்கள் தங்களது பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்து இம்முறை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். இங்கும் அரசியல் சூறாவளி, அரசியல் மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்காக கற்றறிந்த இளைஞர்களையும் பெண்களையும் இந்தத் தேர்தலில் களமிறக்கியிருக்கின்றோம். இதற்கான பேராதரவை தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக வழங்கவேண்டும். தமிழ் மக்கள் இதனை ஏற்பார்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை காணப்படுகிறது.
தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பேசுபவர்கள் பொருளாதார உரிமைகள் பற்றிப் பேசக்கூடாது என்பதையும் தமிழ் மக்களின் பொருளாதார உரிமைகள் பற்றிப் பேசுபவர்கள் அரசியல் உரிமைகளைப் பற்றிப் பேசக்கூடாது என்பதை மலையேற்றி அந்தக் கட்சிகளையும் நபர்களையும் தூக்கி எறியவேண்டும். எங்களைப் பொறுத்தவரை தமிழ் மக்களுடைய ஒரு கண் உரிமையாக இருந்தால் மற்றொரு கண் பொருளாதார நீடிப்பாக இருக்கும். இரண்டையும் சமதானமாக முன்னெடுப்பதாக இருக்க வேண்டும். கடந்த காலத்தில் எமது நிர்வாகத் திறனை தமிழ் மக்களுக்கு செய்து காட்டியிருக்கிறோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இரண்டு ஆண்டுகள் யாழ். மாநகரசபையை நாம் திறம்பட செயற்படுத்தினோம். 45 உறுப்பினர்களை கொண்ட யாழ். மாநகரசபையில் வெறும் 10 உறுப்பினர்களை மாத்திரம் கொண்டு ஒரு சபையை வினைத்திறனாகக் கொண்டு நடத்தி எமது பிரதேசத்தை விருத்தி செய்யலாம் என்பதைக் காட்டினோம் - என்றார். (அ-ம-26)

## என்னுடன்...

ரணில் நேற்று நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றினார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நான் ஜனாதிபதித் தேர்தலில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்டேன். பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் புதிய கூட்டணி ஆகியன ஒன்றிணைந்து எனக்கு ஆதரவளித்தன. இவர்கள் அனைவரும் எனது தலைமையின் கீழ் செயற்பட்டனர். இவர்கள் அனைவரும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஒன்றிணைகின்றனர். புதிய ஜனநாயகக் கட்சியாகப் போட்டியிடுகின்றனர். எனது தலைமைத்துவத்தின் கீழ் அவர்கள் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.
இவர்கள் அனைவரும் உரிய அனுபவம் உள்ளவர்கள். இவர்கள் கடந்த காலங்களில் தங்கள் பணியை ஒழுங்கான முறையில் முன்னெடுத்துள்ளனர். கடந்த இரண்டு வருடகாலமாக என்னுடன் இணைந்து செயற்பட்டவர்களுக்கு நாட்டின் பொருளாதார நெருக்கடியை கையாள்வதற்கான அனுபவம் உள்ளது. ஆகவே அவர்கள் நாடாளுமன்றத்தில் இடம்பெறவேண்டும். அனுபவம் இன்றி நாடாளுமன்றத்தை நிர்வகிக்க முடியாது. நீங்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டால் தோல்வியடைவீர்கள் - என்றார். (அ-ம)

## 5 மில்லியன்...

பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'நான் பிரதமராக இருந்தபோது எனது அரசில் இருந்த இளைய அமைச்சர் ஒருவரின் கணவரால் ஐந்து மில்லியன் டொலர் நாடாளுமன்றத்தில் எனது மேசைக்குக் கொண்டு வரப்பட்டது. 'அதை எடுத்துக்கொண்டு இப்போதே வெளியேறு. நான் உன்னைக் கைது செய்ய உத்தரவிடுவேன்' என்று நான் சொன்னேன். அந்த நபருடன் சிங்கப்பூர் தொழிலதிபர் ஒருவரும் இருந்தார். ஊழலுக்குப் பழக்கப்பட்ட பெரியவர்களின் மனதை மாற்றுவது சாத்தியமில்லை. எனவே, சிறு வயதிலிருந்தே விழுமியங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டியது அவசியம். எங்களில் ஒரு ஜனாதிபதி இருந்தார். அவர், 'உங்களால் முடிந்த வரை திருடுங்கள், ஆனால் பிடிபடாதீர்கள்' என தனது அமைச்சரவையில் தெரிவித்தார். இதை அவர் தனது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்களிடமும் கூறிவந்தார். எல்லோரும் திருடனார்கள். யாரும் கைது செய்யப்படவில்லை. இந்த அமைப்புத்தான் எமது நாட்டைச் சீரழித்துள்ளது -என்றார். (அ-ம)

## அனுபவங்களில்...

கிறோம். உங்கள் பயணத்தின் அடுத்த கட்டத்துக்கு நீங்கள் அடியெடுத்து வைக்கும்போது, எமது தேசத்தின் கடந்த கால பாடங்களை உங்களுடன் எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். அமைதி, உறுதித்தன்மை மற்றும் ஒத்துழைப்பின் மதிப்பை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள் - என்றார். (அ-ம-6)

## நிமோனியாவால்...

திகதி வீட்டுக்குச் சென்றுள்ளார். தாயார் நேற்று வெளியில் சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பியபோது அந்தப் பெண் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.
உடற்கூற்றுப் பரிசோதனையில் நிமோனியா காய்ச்சலால் இறப்பு சம்பவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (அ-ம-26)

## தமிழர்களுடைய...

வித்ததாகக் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.
அவ்வாறு ரில்வின் சில்வா சொல்லியிருப்பார் என்று நான் நம்பவில்லை. இலங்கையில் அனைவருக்கும் சமமான உரிமை உண்டு என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அது எமது கொள்கைகளிலும் ஒன்று. அடுத்து அனைவருக்குமான நீதி சமமானதாக இருக்கவேண்டும். புத்தகத்தில் மாத்திரம் அல்ல செயற்பாட்டிலும் அது இருக்க வேண்டும்.
தமிழ், முஸ்லிம் மக்களின் கலாசார உரிமைகள் ஒழுங்காகப் பாதுகாக்கப்படவில்லை. அதை ஏற்றுக்கொள்கின்றோம். அதனைப் பாதுகாப்பதற்காகவே 13 ஆவது திருத்தம் இந்தியாவால் கொண்டுவரப்பட்டிருந்தாலும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால் தமிழ், முஸ்லிம் மக்கள் நினைக்கின்றார்கள் அந்தச் சீர்திருத்தம் மாத்திரம் இருந்தால் போதும் என்று. அவ்வாறு அல்ல. நாங்கள் புதியதொரு அரசமைப்பைக் கொண்டுவருவோம், அதனூடாக அனைவரது உரிமைகளும் பாதுகாக்கப்படும். அதுவரைக்கும் மாகாணசபை முறைமையைப் பாதுகாப்போம்.
காணாமல் ஆக்கப்பட்ட லலித் குகன் மற்றும் திருகோணமலையில் காணாமல் ஆக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பாக தற்போதே விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். நாங்கள் ஆட்சிக்கு வந்து 3 வாரங்களே ஆகின்றன. எனினும் இத்தனை நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம். அத்துடன் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் -என்றார். (அ-ம-110)

## பெருந்தெருக்கள்...

இதன்போதே ஜனாதிபதி அநுர இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.
அதேபோல் கிராமிய அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது பெறுகைச் செயற்பாடுகள் ஒழுங்குமுறைக்கமைய
முன்னெடுக்கப்படவேண்டும் என்றும், ஒரு சிலருக்கு மாத்திரம் ஒப்பந்தங்கள் கிடைப்பதற்கு மாறாக பிரதேச மற்றும் கிராமிய மக்களுக்கு பலன்கள் கிடைக்கும் வகையில் குறித்த வேலைத்திட்டங்களைத் தயாரிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.
போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக மீளாய்வு செய்யப்பட்டன. (அ-ம-6)

## திருச்சி...

சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டு இருப்பவர்களுக்கு உரிமை தொடர்பாகப் பேசுவதற்கு எந்தவித அனுமதியும் இல்லை என்றும், எங்கள் கட்டுப்பாட்டில் உள்ள நீங்கள் உரிமை தொடர்பாக அல்லது விடுதலை தொடர்பாகப் பேசினால் உங்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்படும் என்றும் திருச்சி சிறப்பு முகாம் துணையாட்சியர் தெரிவித்ததாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
தமிழக அரசு இது விடயத்தில் கவனத்தில் கொண்டு விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். (அ-ம-100)

## மனவழுத்த...

பெரும்பாலான மருந்து வகைகள் நாட்டில் தற்போது கையிருப்பில் உள்ளன. எனினும், மன அழுத்தத்துக்கான நிவாரணியாகப் பயன்படுத்தும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பெண்களை விடவும் ஆண்களே அதிகளவு மன அழுத்தத்துக்கு உள்ளாகின்றனர் - என்றார். (அ-ம-25-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் சுமையைக் குறைக்க வேண்டும்

## சஜித் வலியுறுத்து

**கொழும்பு , ஒக்.18**

**சர்வதேச நாணயநிதிய வேலைத்திட்டத்தினூடாக மேற்கொள்ளப்படும் மக்கள் மீதான சுமையைக் குறைக்கும் வகையிலான புதிய ஒப்பந்தத்துக்கு தற்போதைய அரசாங்கம் செல்லவேண்டும்-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

தற்போதைய அரசாங்கம் நாணயநிதியத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து வரியைக் குறைக்கும் புதிய ஒப்பந்தத்துக்குச் செல்லும் வரை எதிர்பார்ப்புடன் இருக்கிறோம். அவ்வாறான வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் தயாராக இருக்கிறோம்.

அதேபோன்று, வரிச் சுமையற்ற நாட்டைக் கட்டியெழுப்புவதே தற்போதைய ஜனாதிபதியின் பிரதான பொறுப்பாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

(ச-இ)

# இணையவழி மோசடிகள் சீனர்கள் மீது நடவடிக்கை



கொழும்பு, ஒக்.18

இணைய வழி நிதி மோசடியில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தொடர்பாக சர்வதேச பொலிஸினதும் (இன்டர்போல்) சீனாவினதும் உதவியை நாடவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிகால் தல்துவ தெரிவித்துள்ளார். அண்மையில் இணையவழி நிதி மோசடியில் ஈடுபட்டதாக சீனர்களும், இந்தியர்களும், உக்ரேனியர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 200 பேர் சீனர்கள். அந்தவகையில் சீனாவின் நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக சீனா தெரிவித்துள்ளது. இந்த மோசடிக் கும்பல்களுக்கு ஏதாவது சர்வதேச வலைப் பின்னல் தொடர்புகள் உள்ளனவா என்பது பற்றியும் ஆராயவுள்ளதாக நிகால் தல்துவ தெரிவித்துள்ளார்.

(ச-25, 6)

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புகள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244

A/L வரலாறு
அதிக உயர்நிலை பெறுபேறுகளை உருவாக்கும் உங்கள் ஆசிரியர்.
M.பத்மன் B.A (Hons) History, M.A (History) P.G.D.E, M.E.D
A/L 2K26 அனுமதிகள் வழங்கப்படுகின்றன
கற்பிக்கும் இடங்கள் :- D.M.I - ஆரியகுளம் (யாழ்ப்பாணம்).
உயர் கலைக் கல்லூரி (குளப்பிட்டி, கொக்குவில்), BITSMANS (மானிப்பாய்).
தொடர்புகளுக்கு:- 077 482 5587
(CS/56471) J-1



# ஆசிரியர் கலாசாலையில் உளநல நாள் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஒக் . 18

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக உளநல தினத்தையொட்டி சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் ஆரம்பக் கல்விநெறி ஆசிரிய மாணவி ஜெ. சுலோச்சனாதேவி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உளவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க. கஜவிந்தன் அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்டு 'எண்ணங்களின் வலிமை' எனும் தலைப்பில் உரை ஆற்றினார். அதிதிப் பேச்சாளர் கஜவிந்தன் தான் எழுதிய நூல்களின் ஒரு தொகுதியை நூலகப் பொறுப்பு விரிவுரையாளர் வேலும் மயிலும் சேந்தனிடம் வழங்கி வைத்தார்.

ஆரம்பக் கல்வி ஆசிரிய மாணவன் சி. டனிஸ்ரன் உளநல நாள் எனும் தலைப்பிலான உரையையும், கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவு உரையையும் நிகழ்த்தினர்.

(ச-66-9)

# இலங்கையுடன் வர்த்தகம் தீவிரம் காட்டும் பிரிட்டன்




ஐக்கிய இராச்சியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை வலுப்படுத்தும் முயற்சியில் பிரித்தானியா பல்வேறு வேலைத்திட்டங்கள் மற்றும் பொறிமுறைகளை ஆரம்பித்துள்ளது.

வர்த்தகம், முதலீடு, வர்த்தகக் கொள்கை, இலங்கையில் செய்யப்படும் ஏற்றுமதி நிதி ஆகியவற்றை ஊக்குவிப்பதில் பிரித்தானிய அரசாங்கம் தீவிரம் காட்டி வருவதாக தெற்காசியாவுக்கான வர்த்தக ஆணையாளர் தெரிவித்தார். இந்த மூலோபாய முன் முயற்சிகள் பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான வர்த்தகத்தை அதிகரிப்பதையும் வலுவான பொருளாதார உறவுகளை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ச-இ)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | மறைவு |
|---|---|
| 25 . 09 . 1952 | 17 . 10 . 2024 |







## வல்லிபுரம் கருணாகரன்

(ஓய்வு நிலை தாதிய உத்தியோகத்தர்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கருணாகரன் அவர்கள் நேற்று (17.10.2024) வியாழக்கிழமை இறைபதம் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சரஸ்வதி தம்பதியரின் மகனும், காலஞ் சென்ற சின்னத்தம்பி மற்றும் கனகம்மா (பிரான்ஸ்) தம்பதியரின் மருமகனும், செல்வராணி அவர்களின் அன்புக் கணவரும், சோபனா (அவுஸ்ரேலியா), மதுரா (கால்நடை வைத்தியர், சண்டிலிப்பாய்) அவர்களின் அன்புத் தந்தையும், தயாளன் (அவுஸ்ரேலியா), அபிராஜ் (இயந்திர பொறியியலாளர், வடமாகாணம்) அவர்களின் மாமனாரும், அர்சனா, அஸ்மிகன், அனாமிகன், அர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் சண்முகராசா (சுவிஸ்), அரிராசசிங்கம் (சுவிஸ்), சிவபாக்கியம் (கனடா), செல்வபாக்கியம் (கனடா) ஆகியோரின் சகோதரரும், இராஜேஸ்வரி, நவரட்ணராஜா, ஸ்ரீபாஸ்கரநாதன், ரவீந்திரநாதன், வாசுகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி அளவில் அளவெட்டியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஜெயா பிறஸ் சந்தி அருகில்
அளவெட்டி மத்தி,
அளவெட்டி.**

**தகவல் :
குடும்பத்தினர்
077 436 9236**

(CS/56475) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.10. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.